# அக்டோபர் – 10 – புதன்

**புனித பிரான்சிஸ் போர்**

**‘பிற இனத்தாரே நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் போற்றுங்கள்’’ தி.பா.117:1**

## முதல் வாசகம் : கலாத்தியர் 2 : 1 – 2, 7 – 14

சகோதர சகோதரிகளே! பதினான்கு ஆண்டுகளுக்குப்பின் தீத்துவையும் கூட்டிக்கொண்டு பர்னபாவுடன் நான் மீண்டும் எருசலேமுக்குப் போனேன். நான் போகவேண்டும் என்று வெளிப் படுத்தப்பட்டபடியால்தான் அங்கு போனேன். பிற இனத்தார் நடுவில் நான் அறிவித்துவந்த நற்செய்தியைப்பற்றி அங்கே எடுத்துக்கூறினேன். செல்வாக்கு உள்ளவர்களிடம் தனிமையில் எடுத்துரைத்தேன். நான் இப்போது செய்யும் பணியும் இதுவரை செய்த பணியும் பயனற்றுப்போகக்கூடாதே என்பதற்காகத்தான் இவ்வாறு செய்தேன்.ஆனால் யூதர்களுக்கு நற்செய்தி அறிவிக்கும் பணி பேதுருவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது போலவே, பிறஇனத்தாருக்கு அதை அறிவிக்கும் பணி என்னிடம் அவர்கள் கண்டுகொண்டார்கள்.ஆம், யூதர்களின் திருத்தூதராகச் செயல்படும் ஆற்றலைப் பேதுருவுக்குத் தந்தவரே பிற இனத்தாருக்குத் திருத்தூதராகச் செயல்படும் ஆற்றலை எனக்கும் தந்தார்.அந்த அருள்பணி எனக்கு அளிக்கப்பட்டதை உணர்ந்து திருச்சபையின் தூண்கள் எனக் கருதப்பட்ட யாக்கோபு, கேபா, யோவான் ஆகியோர் நட்புறவின் அடையாளமாக எனக்கும் பர்னபாவுக்கும் கை கொடுத்தனர். யூதர்களுக்கு அவர்களும் யூதரல்லாதோர்க்கு நாங்களும் நற்செய்தி அறிவிக்கவேண்டும் என்று ஒத்துக்கொண்டோம்.ஏழைகளுக்கு உதவிசெய்ய மறக்கவேண்டாம் என்று மட்டும் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அதைச் செய்வதில்தான் முழு ஆர்வத்தோடு ஈடுபட்டிருந்தேன்.ஆனால் கேபா அந்தியோக் கியாவுக்கு வந்தபோது அவர் நடந்துகொண்ட முறை கண்டனத்துக்கு உரியது எனத்தெரிந்ததால் நான் அவரை நேருக்கு நேராய் எதிர்த்தேன்.அதாவது யாக்கோபின் ஆள்கள் சிலர் வருமுன் கேபா பிற இனத்தாருடன் உண்டுவந்தார் ஆனால் அவர்கள் வந்தபின் அவர்களுக்கு அஞ்சி அவ்வாறு உண்பதை விட்டுவிட்டார்.மற்ற யூதர்களும் இந்த வெளிவேடத்தில் அவரோடு சேர்ந்துகொண்டனர். இந்த வெளிவேடம் பர்னபாவைக் கூடக் கவர்ந்துவிட்டது.இவ்வாறு அவர்கள் நற்செய்தியின் உண்மைக்கேற்ப நேர்மையாய் நடவாததைக் கண்ட நான் எல்லார் முன்னிலையிலும் கேபாவிடம், ”நீர் யூதராயிருந்தும் யூத முறைப்படி நடவாமல் பிறஇனத்தாரின் முறைப்படி நடக்கிறீரே! அப்படியிருக்க பிற இனத்தார் யூதமுறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென நீர் எப்படிக் கட்டாயப்படுத்தலாம்?” என்றுகேட்டேன்.

**பதில்பாடல் :** உலகெங்கும் போய்ப் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்.

## நற்செய்தி : லூக்கா 11 : 1 - 4

அக்காலத்தில் இயேசு ஓரிடத்தில் இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார். அது முடிந்ததும் அவருடைய சீடர்களுள் ஒருவர் ”ஆண்டவரே, யோவான் தம் சீடருக்கு இறைவனிடம் வேண்டக் கற்றுக் கொடுத்ததுபோல் எங்களுக்கும் கற்றுக்கொடும்” என்றார்.அவர் அவர்களிடம், ”நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது இவ்வாறு சொல்லுங்கள் தந்தையே, உமது பெயர் தூயதெனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக!எங்கள் அன்றாட உணவை நாள்தோறும் எங்களுக்குத் தாரும்.எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோர் அனைவரையும் நாங்கள் மன்னிப்பதால் எங்கள் பாவங்களையும் மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும். (தீயோனிடமிருந்து எங்களை விடுவித்தருளும்”) என்று கற்பித்தார்.

**தியானம்:** இறைமகன் இயேசுவின் அன்றாட வாழ்வில் செபம் பிரதான இடம்பெற்றது. இயேசு எப்போதும் ஜெபக்கூடங்களிலும், தனிமையிலும் செபத்தில் ஈடுபட்டார். அதைப்பார்த்த சீடருக்கு தாமும் அவ்வாறு ஆவல் உண்டாகி செபிக்க கற்றுத்தருமாறு கேட்கின்றார்கள். இயேசுவும் கற்றுக் கொடுக்கின்றார். ஷஷஅதுவே பரலோகத்தில் இருக்கின்ற எங்கள் பிதாவே...’’ அன்று வரை காலங்காலமாக கோடிக்கணக்கான மக்கள் செபித்து வருகின்ற செபம் அது. மிகச் சுருக்கமானது, மிக எளிமையானதும் அர்த்தம் நிறைந்ததும். நம் கிறிஸ்வ வாழ்விற்கு வேண்டிய எல்லா அம்சங்களையம் உள்ளடக்கியது. இதை நாம் தியானிக்கும் போது பல உண்மைகளைக் காண்கின்றோம். ஷஷதந்தையே என அழைக்கின்ற போது குறிப்பாக எமது பாவநிலையை உணர்து தந்தைமகன், மகன் என்ற உறவு முறையின் நெருக்கத்தை நமக்கு தருகின்றது. நாம் உயிர்வாழ கடவுளிலே முழுவதுமாய் தங்கியிருக்க வேண்டுமென்று உணர்ந்து கொள்வதோடு சமூக வாழ்க்கையில் பிறரை நாம் மன்னிக்க வேண்டும் என்ற அவசியத்தையும், நாம் மன்னிப்பு பெறவேண்டியதையும் வலியுறுத்துகின்றது. ஆக மொத்தம் செபம் என்பது விண்ணப்பம் மட்டுமல்ல மனிதன் கடவுளையும், தன்னையும் கண்டுகொள்கின்றான். அப்படிப்பட்ட மனிதர்களே இறையாட்சியின் கருவிகாக வாழமுடியும்.